பக்கங்கள் - 06
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 22 சனிக்கிழமை (05.06.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

### எழுமாறான பரிசோதனையில்
## 13 வவு. சகாயமாதாபுரத்தில் பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியில் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட எழுமாற்று பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையில் 13 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் வீதிகளில் அத்தியாவசிய 02

## கொரோனாவிலிருந்து மக்களை காப்பாற்றவே நாட்டை முடக்கினோம்



### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

“மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே நாட்டை முடக்கி வைத்துள்ளோம்.

நாட்டை முடக்குவது, ஜனாதிபதியினதோ அல்லது என்னுடைய தனித் தீர்மானமோ அல்ல. 02

### தடுப்பூசி வழங்க முன்னுரிமையளித்ததுபோல
# அரசியல் தீர்வுகளையும் வடக்குக்கு வழங்குங்கள்



### மங்கள சமரவீர அரசுக்கு அறிவுரை

(கொழும்பு)

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளை வடக்கு மக்களுக்கு வழங்குவதற்கு முன்னுரிமையளித்ததுபோல அவர்கள் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகளை வழங்க அரசு முன்வர வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### முன்னாள் எம்.பி
## ஹரிசனுக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் கொரோனா 3ஆவது அலை தீவிரம் பெற்றதன் பிற்பாடு அரசியல் தரப் 02

### விபரீத முடிவால்
## இளைஞன் சடலமாக மீட்பு



02

### திருட்டில் ஈடுபட்ட
## மூன்று பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

பயணத் தடை வேளையில் யாழ்ப்பாண குடாநாட்டின் 02

## யாழ்.ஐந்து சந்தியிலுள்ள பள்ளியில் தொழுகை
### 14 பேர் தனிமைப்படுத்தலில்

(குப்பிழான்)

தற்போது இலங்கை முழுவதும் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் 02

### யாழ்ப்பாணத்தில் 55 பேர் உட்பட
## வடக்கில் 74 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 74 பேருக்கு நேற்று கொரோ 02

## வவுனியாவில் குளத்தில் மூழ்கி 17 வயது சிறுவன் பலி

(வவுனியா)

வவுனியா மருக்காரம்பளை அரசன்குளத்தில் மூழ்கி 17 வயது சிறுவன் பலியாகியுள்ளான்.

மீன் பிடிப்பதற்காக நண்பர்களுடன்சென்று குளத்தில் நீந்தியபோதே 02

## 2 இலட்சத்தை நெருங்கும் கொரோனாத் தொற்றாளர்கள்
### நேற்றும் 3,410 பேருக்கு தொற்று

(கொழும்பு)


கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 ஆயிரத்து 410 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02

### தென்னிலங்கையில் சீரற்ற காலநிலை
### மூன்று பேர் பலி

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 31,990 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 33,280 பேர் பாதிக்கப்பட்டிருப் 02

### கொரோனாத் தொற்றால்
## 48 பேர் நேற்று மரணம்



(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் 02

BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON
BOC Travels (Pvt) Ltd
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்
Hospital Road, Jaffna.
எமது நிறுவனம் தற்போதைய பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள வேளையிலும் வெளிநாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டை வழங்குகின்றது.
உடன் அழையுங்கள்
24 மணிநேர தொடர்புகளுக்கு
070 384 9335/070 395 1794
sureshk@boctravels.com
(C-2201)

## ஹரிசனுக்கு...

பில் பலர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

அந்த வரிசையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## யாழ்.ஐந்து சந்தி...

பகுதியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்ட 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாரும் மேற்படி பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின்போதே தொழுகையில் ஈடுபட்ட விடயம் தெரியவந்தது.

இதேவேளை, சிலர் குறித்த பள்ளிவாசலிலும் ஏனையவர்கள் அவர்களின் வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33)

## வவுனியாவில்...

சிறுவன் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருக்காரம்பளையைச் சேர்ந்த ஜெயக்குமார் அரசபண்டார என்ற சிறுவனே இவ்வாறு பலியாகியுள்ளான்.

சடலம் அயலவர்களால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-299)

## கொரோனா...

விசேட வைத்திய நிபுணர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே நாட்டை முடக்கத் தீர்மானித்தோம்."

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இருக்கும் இலகுவான வழிமுறை நாட்டை முடக்குவதென்றால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாடளாவிய ரீதியில் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும், மரணங்களும் அதிகரித்துள்ளன எனவும் சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக எமக்கு வலியுறுத்தினர்.

இந்நிலையில், தற்போது நாட்டை திறப்பது ஆரோக்கியமான விடயமல்ல என்பது எமக்கும் தென்பட்டது.

ஏற்கெனவே இரண்டு வாரங்கள் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட அதில் முறையாக மக்கள் செயற்படாத நிலையொன்று காணப்பட்டது.

அதன் பின்னரும் ஒரு சில பகுதிகளில் மக்களின் அநாவசியச் செயற்பாடுகளை அவதானிக்க முடிந்தது. எனவேதான் 7ஆம் திகதி வரையில் பிறப்பிக்கப்பட்டிருந்த பயணத் தடையை மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கத் தீர்மானித்தோம்.

இந்தத் தீர்மானமானது ஜனாதிபதியின் தனித் தீர்மானமோ அல்லது நான் எடுத்த தனித் தீர்மானமோ அல்ல. நாட்டில் உள்ள விசேட வைத்திய நிபுணர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு அமைய, கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

எனவே, ஏற்கெனவே 14 நாட்கள் பயணத்தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட 21 நாட்கள் தொடர்ச்சியாகக் கட்டுப்பாடுகளை விதித்தால் மட்டுமே முழுமையான பெறுபேறுகள் வெளிப்படும்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இருக்கும் சரியான வழிமுறை நாட்டை முடக்குவதென்றால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனால் மக்களுக்கு சிரமங்கள் ஏற்படும். ஆனால், அதனையும் தாண்டி மக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே செயற்படுகின்றோம்" என்றார். (ஞா)

## வவு.சகாயமாதா...

தேவையின்றி நடமாடுவோர் மற்றும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட இடங்களில் சுகாதாரப் பிரிவினரால் நேற்று எழுமாற்று பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்தவகையில், ஏற்கெனவே தொற்றாளர்கள் சிலர் இனங்காணப்பட்ட வவுனியா சகாயமாதாபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான 20 அன்டிஜன் பரிசோதனையில் 13 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கிராமத்தில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், கிராமத்தை முடக்குவது குறித்தும் சுகாதாரப் பிரிவினர் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-250,299)

## அரசியல் தீர்வு...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கோவிட் தொற்றால் வடக்கு மாகாண மக்களும் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

வடக்கிலுள்ள சகல மக்களுக்கும் கோவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட வேண்டும். அதேபோல் ஏனைய மாகாணங்களிலுள்ள அனைத்து மக்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும்.

சீனாவின் தடுப்பூசி விவகாரத்தில் மிகப் பெரிய மோசடி இடம்பெற்றுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் உண்மைத்தன்மையை இலங்கை அரசும் சீனத் தூதரகமும் கூட்டாக அறிவிக்க வேண்டும்.

அதைவிடுத்து இரு தரப்பும் தனித்தனியே மறுப்புக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் எவ்வித பயனும் இல்லை.

சீனாவை மட்டும் நம்பி இருக்காமல் முன்னணி நாடுகளிடமிருந்து கோவிட் தடுப்பூசிகளை அரசு விரைந்து கொள்வனவு செய்ய வேண்டும்.

நாட்டு மக்களுக்கு ஒரு "டோஸ்" தடுப்பூசியை ஏற்றினால் மட்டும் போதாது. இரண்டாவது "டோஸ்" மருந்தையும் உரிய காலத்துக்குள் ஏற்ற வேண்டும். அப்போதுதான் கோவிட் நோய்த் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும்" என்றார். (ஞா)

## மூன்று பேர்...

நகரப் பகுதிகள், ஆனைப்பந்தி, நாவலர் வீதி, கோவில் வீதி பகுதிகளில் உள்ள மூடப்பட்டிருந்த கடைகளை உடைத்து பெறுமதியான பொருட்கள், தொலைக்காட்சி, துவிச்சக்கரவண்டி மற்றும் மின்சாதன பொருட்கள், விலை உயர்ந்த உணவு பொருட்கள், பிஸ்கட் வகைகள், பால் பக்கெட்டுகள், பெறுமதியான பொருட்கள் திருடப்பட்ட நிலையில் குறித்த கடை உரிமையாளர்களினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நேற்றைய தினம் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து களவாடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படவுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் மற்றும் நாவற்குழி பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் 20 தொடக்கம் 30 வயதினை உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-18,33,104)

## 2 இலட்சத்தை...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 254 ஆக உயர்வடைந்துள்ளது. (ஞா)

## வடக்கில் 74...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 39 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில்

தற்போது யாழ்.போதனா ஆய்வுகூட முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 7 பேர், மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் என வடக்கில் 74 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா-18,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## 48 பேர்...

நாயகம் உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,656 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## தென்னிலங்கை...

பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையினால் மூவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்தோடு இரண்டு பேர் காணாமற்போயுள்ளனர். ஏழு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் 468 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

27 நலன்புரி மத்திய நிலையங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. (ஞா)

## இளைஞன்...

விபரீத முடிவெடுத்ததில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் கொழும்புத்துறை ஏ.வி வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யேசுராசா சுபீட்சன் றிபுஸ் (வயது-22) என்ற இளைஞனே அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

> தூய்மையான மனச்சாட்சி இடி முழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும்!
> – தாமஸ் முல்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சினோபார்ம் தடை மருந்து தெளிவுபடுத்தல் அவசியம்

அஞ்சி அஞ்சிச் சாவார் – இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே...

என்ற பாரதியாரின் கவிவரிகள் எத்துணை நிதர்சனமானவை.

உண்மை, எதையும் தெளிந்து தீர்மானம் எடுக்கின்ற நடைமுறை நம்மிடம் இல்லாத காரணத்தால் எதுகுறித்தும் ஐயுறவு கொள்ள வேண்டிய மனநிலைக்கு நாம் ஆளாகின்றோம்.

இந்நிலைமைக்கு உரிய தரப்புகள் போதிய விளக்கங்களை முன்வைக்கத் தவறுவதால் தேவையற்ற விமர்சனங்களும் ஊகங்களும் வதந்திகளும் காட்டுத் தீ போல் பற்றிப் பிடித்து விடுகின்றன.

ஆம், சீனாவின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட சினோபார்ம் கொரோனாத் தடை மருந்து யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐம்பதாயிரம் பேருக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

கொரோனாத் தடை மருந்து தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலும், கொரோனாவுக்கு எதிரான சினோபார்ம் தடை மருந்தை ஏற்றிக் கொள்வதில் எம் மக்கள் ஆர்வம் காட்டியிருந்தனர்.

கொரோனாத் தொற்றின் வேகமும் அதனால் ஏற்பட்டு வரும் மரணங்களும் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியமையும் தடை மருந்து ஏற்றிக் கொள்வதன் அவசியத்தை எமது வைத்திய நிபுணர்கள் வலியுறுத்திய நிலையிலும் மக்கள் சினோபார்ம் தடை மருந்தை ஏற்றிக் கொண்டனர்.

எனினும், இப்போது சினோபார்ம் தடை மருந்துக்கு எதிராக சில கருத்துக்கள் பரவி வருவதால், குறித்த மருந்தை ஏற்றிக் கொண்டவர்கள் தங்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்து விடுமோ என்று பயப்பீதியடையத் தொடங்கியுள்ளனர்.

அதாவது தடை மருந்து ஏற்றிக் கொள்வதற்கு முன்னதாக; கொரோனாத் தொற்று ஏற்பட்டுவிடுமோ என்று பயந்த எம் மக்கள், இப்போது கொரோனாத் தடை மருந்தாகிய சினோபார்மை ஏற்றிக் கொண்டதால் தங்களுக்கு ஆபத்து ஏற்படலாமோ என்று அஞ்சுகின்றனர்.

என்ன செய்வது போதிய விளக்கங்கள் இன்மையாலும் சுகாதார அமைச்சு சரியான உத்தரவாதத்தை வழங்காமையாலும் தேவையற்ற ஊகங்கள் உலா வந்து மக்களை அச்சுறுத்துகின்றன.

ஆகவே, இது விடயத்தில் சுகாதார அமைச்சு உடனடியாக உரிய விளக்கத்தையும் உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும்.

இல்லையேல் தடை மருந்து ஏற்றியவர்களும் ஏற்றாதவர்களும் தேவையற்ற குழப்பத்துக்கு ஆளாகுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# மானிய உரம் வழங்கப்படவில்லை இரணைமடு விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு முழுமையாக இதுவரை மானிய உரம் வழங்கப்படாமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக கூட்டத்தீர்மானத்திற்கு அமைவாக விவசாயிகள் சிறு போக செய்கை மேற் கொண்டு 53 நாட்களை கடந்துள்ள போதும் விவசாயிகளுக்கு தேவையான மானிய உரம்

தற்போது விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை மற்றும் தொழில் வாய்ப்பின்மை காரணமாக தமக்குரிய உரங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாத நிலை காணப்படுவதுடன் தனியார் கடைகளில் அதிகூடிய விலைகளில் உரங்களை விற்பனை செய்வதனால் அவற்றை பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளதுடன் தமக்கான மானிய உரங்களை பெற்றுத்தர அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6,315)

# வவுனிக்குளத்தில் 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக இடம் பெற்று வருவதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனிக்குளம் சிறுபோக பயிர்ச் செய்கைக் கூட்டத்தில் இவ்வாண்டு 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் தற்போது உப உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் வெற்றிகரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உப உணவுப் பயிர்ச் செய்கையில் குரங்குகளின் தொல்லை காணப்படுவதாகவும் விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6,350)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை கல்வி நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொது ஆளணி மற்றும் விசேட ஆளணி அடிப்படையில் 442 பேரை உள்ளீர்ப்பதற்காக இந்த விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி 30.07.2021 என அறிவிக்கப்பட்டுள்ளது மேலதிக தகவல்களுக்கு நேற்று 4 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலைப் பார்வையிடவும். (4-6)

## ஆடை தொழிற்சாலைகளை தற்காலிகமாக மூட தீர்மானம்

(முறிகண்டி)

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலைகளை தற்காலிகமாக மூட கரைச்சி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், அடைத் தொழிற்சாலை நிர்வாகம் ஒத்துழைக்காவிடின் நீதிமன்றை நாடவும் சபைஅங்கிகாரம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை அமர்வு நேற்று தவிசாளர் அ. வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று பரவல் நிலை மற்றும் பாதிக்கப்பட்டமக்களிற்கு உதவுதல் உள்ளிட்டவிடயங்கள் ஆராயப்பட்டது. இதன் போதுகரைச்சி பிரதேச சபைஎல்லையில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகள் இரண்டிலும் பலர் பணி புரிவதாலும், அங்கு தொற்று அபாயம் காணப்படுவதாலும் அவ் ஆடை தொழிற்சாலைகளை தற்காலிகமாக மூடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்கு அமைவாக குறித்த அமர்வில் ஆடைத்தொழிற்சாலைகள் இரண்டையும் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் சபையில் தீர்மானத்தை அறிவித்தார். (4-6,100,316)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 6 ஆம் திகதி ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கொடிகாமம் 53 ஆம் பிரிவு இராணுவ முகாம், அல்லாரை, கொடிகாமம் பேருந்து நிலையம், டச்சு வீதி மீசாலை, எருவன் கொடிகாமம், கச்சாய், கரம்பன், கறுக்காய் வரணி, கெற்பெலி, கொடிகாமம் பொலிஸ் நிலையம், குடமியன் மந்துவில், மிருசுவில் வடக்கு, நாவற்காடு, மீசாலை, சுட்டிபுரம், தாவளை இயற்றாலை, வாகையடிச்சந்தி, மீசாலை, வாழைத்தோட்டம், வரணி கலைவாணி, வரணி சந்தை பிரதேசம், மாசேரி, வெள்ளாம்பொக்கட்டி, கார்கில்ஸ் சுன்னாகம், மல்லாகம் நீதிமன்றம், மக்கள் வங்கி சுன்னாகம், அளவெட்டி, அளுக்கை, இலங்கை வங்கி சுன்னாகம், சுன்னாகம் சந்தை, கொமர்ஷல் வங்கி சுன்னாகம், ஏழாலை, கணேஸ்வரம் தெல்லிப்பளை, ஜெட் மோட்டார், கல்லாரை மல்லாகம், கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், மாத்தனை, மல்லாகம் சந்தி, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மல்லாகம் நீதிமன்றப் பிரதேசம், பன்னாலை, சுகாதார அமைச்சு பண்ணை, நெபாட் வலைத் தொழிற்சாலை, சிறை வளாகம், ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற் சாலை, துரையப்பா விளையாட்டரங்கு, சீனோர் குருநகர் ஐஸ் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் கோட்டை, கடற்கரை வீதி பழைய பூங்கா வீதிச்சந்தி, டேவிட் வீதி, கடற்கரை வீதி, குருநகர், குருநகர் கடற் கரை வீதி, பண்ணை, வில்லூன்றி, கோப்பாய் கல்வியியல் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், கிருஷ்ணன் கோவிலடி, இராஜ வீதி கோப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

நாட்டில் பயணத் தடை அமுல்படுத்தப்படும் நாட்களில் திட்டமிட்ட மின் தடங்கலானது மீள் பரிசீலனை செய்து மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டை முழுமையாக முடக்குவதன் ஊடாக கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியாது

(கொழும்பு)

**நாட்டை 14 நாட்களோ அல்லது 28 நாட்களோ முழுமையாக முடக்குவதன் ஊடாக மாத்திரம் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியாது என்பதை சுகாதார நிபுணர்கள் நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய வலியுறுத்தியுள்ளார்.**

நாட்டில் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய கடிதமொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை மருத்துவ அமைப்பினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிந்துரைகளில் மேலும் ஒரு வாரத்திற்கு நாட்டில் பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதனை மேற்கோள்காட்டி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் வைத்தியநிபுணர் ரவி ரன்னன் எலிய, மேலும் கூறியிருப்பதாவது,

ஜனாதிபதியிடம் இலங்கை மருத்துவ அமைப்பு முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் எனக்குப் பிரதானமாக இரண்டு சந்தேகங்கள் எழுகின்றன.

14 நாட்கள் நாட்டை முடக்குவதன் ஊடாக கொவிட் - 19 வைரஸ் பரவல் சங்கிலியை முறியடிக்க முடியும் என்று ஆரம்பத்தில் ஜனாதிபதியிடம் கூறியவர்கள், தற்போது மேலும் 7 நாட்கள் நாட்டை முடக்கவேண்டும் என்று கோருகின்றார்கள்.

உண்மையில் 14 நாட்கள் முடக்கத்தின் ஊடாக வைரஸ் பரவலைக் கட்டுபடுத்த முடியும் என்பது உலகளாவிய ரீதியில் எவ்வகையிலும் நிரூபணமாகியிருக்கவில்லை.

ஆகவே 14 நாட்களோ அல்லது 28 நாட்களோ நாட்டை முடக்குவதன் ஊடாக இதனை முடிவிற்குக் கொண்டுவரமுடியாது என்பதை சுகாதார நிபுணர்கள் நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (4-6)

# யாழ். மாவட்டத்திற்கு மேலும் தடுப்பூசிகளை வழங்க தயார்

## இராணுவத் தளபதி



(கொழும்பு)

"யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குத் தொடர்ச்சியாக கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம்." என கொரோனாக்கட்டுப்பாட்டுச்செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, ஜனாதிபதியின் பணிப்பில் 2 ஆயிரத்து 100 தடுப்பூசிகள் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

யாழ். மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகளில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்குவதால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. நாங்கள் மேலும் தடுப்பூசிகளை யாழ். மாவட்டத்துக்கு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்" என தெரிவித்தார். (4-6)

## 5 ஆயிரம் ரூபாய் கேட்டு

# கூரிய ஆயுதத்துடன் வருகைதந்த பெண்

(காலி)

காலி - ஹுங்கம பகுதியில் 5000 ரூபா நிவாரண கொடுப்பனவை பெறுவதற்காக பெண் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றுடன் வருகைத்தந்துள்ளார்.

இதையடுத்து பணம் பெற வந்திருந்தவர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அதிகாரிகளின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றத்திற்காக அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வாக்காளர் பட்டியலில் பெயரிடப்பட்டவர்களுக்கு மட்டுமே 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் தனது பெயரையும் இணைத்துக்கொள்ளுமாறு குறித்த பெண் கூரிய ஆயுதத்துடன் வருகை தந்து அதிகாரிகளை அச்சுறுத்தியுள்ளார். (4-6)

## அமெரிக்கா வெளியிட்டுள்ள

# தடுப்பூசிகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை



(கொழும்பு)

25 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா இலங்கையையும் தெரிவு செய்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள நாடுகளிடமிருந்து தடுப்பூசிகளுக்கான கோரிக்கைகளை அமெரிக்கா பெற்றுள்ளது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அதற்கமைய இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து, லாவோஸ், பப்புவா நியூ கினியா, தைவான் மற்றும் பசிபிக் தீவுகளுக்கு இவ்வாறு தடுப்பூசிகளை பகிர்ந்து கொள்ளவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மில்லியன் கணக்கான அமெரிக்க தடுப்பூசிகளை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்துகொள்வது அமெரிக்க அரசாங்கத்தின் பெரும் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதேநேரம், தாங்கள் இந்த அளவுகளைப் பகிர்ந்துகொள்வது, உதவிகளைப் பெறவோ அல்லது சலுகைகளைப் பெறவோ அல்ல உயிரைக் காப்பாற்றுவதற்கும் தொற்றுநோய்க்கு முற்றுப்புள்ளி வைத்து உலகை வழிநடத்துவதற்குமே என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார். (4-6)



**உலகளவில் கொரோனா**

**தொற்று : 172,946,180**

**உயிரிழப்பு : 3,718,601**

**(நேற்றைய நிலவரம் )**

# சைபர் தாக்குதல்கள் ஏதும் இடம்பெறவில்லை

## தொழிநுட்ப கோளாறே காரணம்




(கொழும்பு)

இலங்கையில்உள்ள6 இணையத்தளங்களில் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டுள்ளதே தவிர சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், இலங்கை நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட மேலும் சில இணையத்தளங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

குறித்த இணையத்தளங்களை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கையில் இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு ஒருங்கிணைப்பு மையம் (SLCERT) ஈடுபட்டு வருகிறது.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.mahindarajapaksa.lk என்ற இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி நுணாவில் மேற்கு பத்திரகாளி அம்பாள் வீரபத்திரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ தே.குருராஜசர்மா வின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 2,069 பேர் தனிமைப்படுத்தலில்

(தருமபுரம்)

கிளிநொச்சிமாவட்டத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதிலிருந்து இதுவரை 648 தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் இதுவரை 2069 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஒரு இறப்பு பதிவாகியுள்ளதாகவும் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகரட்ணம் சரவணபவன் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் புதுவருடத்திற்கு பின்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று கொத்தணி உருவாகியிருந்தது அதனை படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்

மாவட்டத்தில் கொவிட் தொற்றை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம் பயணக்கட்டுப்பாட்டு நேரங்களில் கிராமங்களுக்குள் நடமாடுவதை தவிர்க்க வேண்டும் முக்கிய நிகழ்வுகள் தவிர்க்கப்படவேண்டும் இளைஞர்கள் கூட்டாக சேர்வதை தவிர்க்கவேண்டும்

மேலும் மக்கள் சுகாதார நடைமுறையைப்பின்பற்றி தமது அன்றாட தேவைகளில் ஈடுபடக்கூடியவாறு தொழில் நடவடிக்கை, விவசாயம், மீன்பிடி போன்றவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (4-6,316)



# விதை உழுந்து திருட்டு இருவர் கைது

(தருமபுரம்)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் அமைந்துள்ள மாதிரி விவசாய பண்ணையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விதை உளுந்து களவாடப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த தினத்தில் கடமையிலிருந்த காவலாளிகள் இருவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டதையடுத்து பொலிஸாரால் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இரண்டு நபரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.(4-6,315,316)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் MAS Holdings நிறுவனத்தின் விடியல் மற்றும் வானவில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக தொழிற்சாலையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை விபரங்களை அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு, சுகாதார அமைச்சிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஆடைத் தொழிற்சாலையின் கொவிட் நிலவரம் தொடர்பாக, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அமைச்சரின் இணைப்பாளர் வை. தவநாதன், மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஆகியோருடன் உரையாடலை நடத்தியிருந்தார்.

இதன்போது, ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் உட்பட, கிளிநொச்சி மாவட்டத்தின் முன்கள பணியாளர்களுக்கு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், அமைச்சரின் இணைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான வை.தவநாதன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதுபற்றி ஜனாதிபதியுடன் பேசி உரிய ஏற்பாடுகளைச் செய்வதாக இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார். (4-6,350)

# சீரற்ற காலநிலையால் சிறுகடற்தொழிலாளர் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சிறுகடற் தொழிலாளர்கள் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் கண்டாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் இந்நிலையில் குறித்த சிறு சிறு கடற்பகுதியில் ஏற்பட்ட கடும் காற்று மற்றும் அதிகூடிய வெப்பநிலை காரணமாக தொழில் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்

அதேவேளை கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக குறித்த சிறு கடல் பகுதியில் இறால்களின் உற்பத்தி மற்றும் பெருக்கம் என்பன குறைந்து காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர் (4-6,315)

# சங்கரத்தையில் திடீரென தீப்பற்றி எரிந்த வீடு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கரத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்று நேற்று காலை திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.



இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,குறித்த வீட்டில் முதியவர் ஒருவர் மட்டுமே வசித்து வருகின்றார்.

இந்த நிலையில் நேற்று காலை அந்த வீடு திடீரெனத் தீப்பற்றி எரிய ஆரம்பித்துள் ளது. இதனை அவதானித்த அயலவர்கள் விரைந்து செயற் பட்டு தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இருப்பினும் வீடும் மோட்டார் சைக்கிளும் தீயில் அகப்பட்டு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

எனினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (4-6,104)

# மணல் அகழ்வை கட்டுப்படுத்தி சுற்றுச் சூழலை பாதுகாக்கவும்

## கண்டாவளை மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த கண்டவளை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டாவளை பிரதேசத்தில் கனகராயன் ஆற்றுப் படுக்கையின் மேட்டுநில பகுதியில் சட்டவிரோத மண்ணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ளபயணத்தடை அமுல்படுள்ள சமயத்தில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஏன் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் தமது பிரதேசம் உவர் நீர் அபாய பிரதேசமாக மாறாமல் சுற்று சூழலை பாதுகாத்து தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6,100,316)

# தடம் புரண்டது பாரவூர்தி

முல்லைத்தீவு துணுக்காய் வடகாடு பகுதியில் பாரவூர்தி ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது

முல்லைத்தீவு மாங்குளத்தில் இருந்து மல்லாவி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று வடகாடு பகுதியில் பாலம் ஒன்றுக்குள் தடம்புரண்டுள்ளது

குறித்த விபத்து நேற்று காலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது இந்த விபத்தில் சாரதி மற்றும் உதவியாளர் காயங்கள் ஏற்படாது உயிர் தப்பியுள்ளனர். (4-6,316)

# தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் அரசியல் மயமாகியுள்ளன

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் கீழ் தரமான அரசியலால் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இலங்கையில் தற்போது தடுப்பூசி அரசியலே காணப்படுகிறது என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அரசாங்கத்தை கடுமையாக சாடியுள்ளது.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ,

தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளுக்காக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஆலோசனை வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வேலைத்திட்ட திட்டமிடல்களும் காணப்பட்டன. அந்த வேலைத்திட்டங்களுக்கு அமையவே தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். உலகின் பல நாடுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வேலைத்திட்டங்களையே ஏற்றுக் கொண்டுள்ளன. இவற்றை இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் கீழ் தரமான அரசியலால் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இலங்கையில் தற்போது தடுப்பூசி அரசியலே காணப்படுகிறது. சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கும்போதும், வீதி அபிவிருத்திகளின் போதும், பாடசாலைக்கு மாணவர்களை உள்வாங்கும்போதும் இடம்பெறுவதைப் போன்று மனித உயிருடன் தொடர்புடைய தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ஞா)

# இனந்தெரியாத நபர்களினால் தாய், மகனுக்கு அச்சுறுத்தல்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு குளம் பகுதியில் வசித்துவரும் செல்வசுந்தரம் பரமேஸ்வரி என்பவரின் வீட்டுக்கு கடந்த மே மாதம் 19 ஆம் திகதி பகல் 3 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் 2 பேர், குறித்த பெண்ணின் மூத்த மகனான சசிகரன் தொடர்பான விபரங்களை கேட்டு அவரை மிரட்டியுள்ளனர்.

அவர் தகவல்களை தர மறுத்ததால் அவரை தாக்கிவிட்டு மகன் தொடர்பான தகவலை வழங்காது விட்டால் அவரை கொலைசெய்வதாக மிரட்டி விட்டு சென்றுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பின்னர், தனக்கும் தனது இரண்டாவது மகனின் உயிருக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாக மனஉழைச்சலிற்கும் உள்ளாகியுள்ளதாகவும் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு எமக்கு பாதுகாப்பு தருமாறும் கோரி கடந்தவாரம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். (ஞா)

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் (Sarah Hulton) அவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பொன்று, நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களைப் பாராட்டிய உயர்ஸ்தானிகர், தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு பற்றி கருத்துத் தெரிவித்தார். வணிகப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிக்கு, பிரித்தானிய அரசாங்கம் வழங்கக்கூடிய பங்களிப்பு தொடர்பாகவும் உயர்ஸ்தானிகர் அவதானம் செலுத்தினார்.

“எக்ஸ் பிரஸ் பேர்ள்” கப்பல் மூலம் ஏற்பட்ட பாதிப்பை ஆய்வு செய்வதற்கு, பிரித்தானியாவின் தொழிநுட்ப ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். ஜெனிவா முன்மொழிவு தொடர்பாகவும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட ஏனைய விடயங்கள் பற்றி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களைத் தெளிவுபடுத்தினார். (ஞா)

## ரூ. 5 ஆயிரம் வழங்கப்படவில்லை

# அராலியில் பொதுமக்கள் கவனயீர்ப்பு தொடர்பில்

## சங்கானை பிரதேச செயலர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை; அராலியில் பொதுமக்கள் கவனயீர்ப்பு - மோசடி இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டு எனும் தலைப்பில் 04.06.2021 அன்று வலம்புரி மின்னிதழில் இடம்பெற்ற செய்தி தொடர்பாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி பி. பிறேமினி விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த புது வருடத்திற்கு வழங்கப்படவிருந்த மூன்றாம் கட்ட 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுக்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத காரணத்தினால் குறித்த ஒரு தொகை மக்களுக்கு 3 ஆம் கட்ட கொடுப்பனவினை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் அவர்களுக்கு அக் கொடுப்பனவு வழங்கப்படும் என்ற ஏற்பாட்டிற்கிணங்கவே குடும்ப அட்டைகள் கிராம அலுவலர் அலுவலகத்தில் பொதுமக்களால் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இது வரை அந்தக் கொடுப்பனவு கிடைக்கப்பெறாத காரணத்தினால் அவர்களுக்குரிய குடும்ப அட்டைகள் கிராம அலுவலரினால் மீள வழங்கப்பட்டன.

2020ஆம் ஆண்டு இரண்டு தடவைகள் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் அதற்கு முன்னதாக சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி கடன் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. சமுர்த்தி கடன் வழங்கிய போது குடும்ப அட்டையில் பதிவு செய்யத் தவறிய காரணத்தினால் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கியபோது சமுர்த்தி கடனுக்குரிய பயனாளி அல்லாத சிலரிடமும் அவ்வாறு பதிந்து கையொப்பம் பெறப்பட்டமையால் அப்போதே அப்பதிவுகள் வெட்டி நீக்கப்பட்டன. நீக்கப்பட்ட பதிவுகளிளுள்ள கையொப்பங்கள் அதே பொது மக்களால் வைக்கப்பட்டமையே. ஒரு வருடம் கடந்த நிலையில் புதுவருட கொடுப்பனவு கிடைக்காத ஆதங்கத்திலிருந்த அந்த மக்கள் அவை தங்களுடைய கையொப்பம் இல்லை என கூறி உத்தியோகத்தர்களை சந்தேகத்திற்கிடமானவர்களாக நோக்க முற்படுகின்றனர். அக்குடும்ப அட்டைகளைப் பரிசீலித்துப் பார்த்த வகையில் அக் கையொப்பங்கள் சம்பந்தப்பட்ட பொது மக்களால் இடப்பட்டதே தவிர உத்தியோகத்தர்களால் இடப்பட்டதல்ல என்பதை என்னால் உறுதிபடக் கூற முடியும்.

இரண்டு தடவைகள் கொடுப்பனவைப் பெற்றிருப்பதாக அம்மக்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். மூன்றாவது கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதை பிரதேச செயலகமும் ஏற்றுக் கொள்கின்றது. அப்படியிருக்க மோசடி நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டுவது எந்த வகையிலும் பொருத்தமான ஒன்றல்ல என்றுள்ளது. (ஞா)

# கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க யாழ். போதனாவில் இட நெருக்கடி

## 3 ஆவது விடுதியும் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை பதில் பணிப்பாளர், மருத்துவர் ச.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

அதனால் தற்போது இரண்டு கோவிட்-19 சிகிச்சை விடுதிகள் காணப்படும் நிலையில் மேலதிகமாக மூன்றாவது விடுதியும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக இரண்டு விடுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அந்த விடுதிகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் 10 படுக்கைகளைக் கொண்ட புதிய விடுதி அவசர சிகிச்சை பிரிவுடன் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றார். (ஞா-18,33)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2021 இல் வெளியிடப்பட்டது.